"HINDU TAMIL"

DATE: 17.04.2021

PAGE NO: 03

## கல்லூரிகளில் தேர்வுகள் ஒத்திவைப்பு

புதுச்சேரி

புதுச்சேரி மத்திய பல்கலைக் கழகத்தின் கீழ் இணைப்புக் கல்லூரிகளில் வரும் 19-ம் தேதி முதல் எழுத்து மற்றும் செய்முறை தேர்வுகள் தொடங்குவதாக இருந்தன.

தற்போதைய கரோனா சூழலால் இத்தேர்வுகள் மறு அறிவிப்பு வரும் வரை ஒத்தி வைக்கப்படுகின்றன. தேர்வுகளுக்கான தேதி பின்னர் அறிவிக்கப்படும் என்று பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டாளர் லாசர் அறிவித்துள்ளார்.

புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் கீழ் 90 கல்லூரிகள் உள்ளன. இதில் மருத்துவம், பொறியியல், சட்டம், கலை அறிவியல் கல்லூரிகள் ஆகியவை உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

"MALAI MALAR"

DATE: 17.04.2021

PAGENO: 03

## புதுவை பல்கலைக்கழக தேர்வுகள் ஒத்திவைப்பு

புதுச்சேரி, ஏப். 17–

புதுவை பல்கலைக் கழகத்தின் கீழ் மருத்துவம், என்ஜினீயரிங், சட்டம், கலை, அறிவியல் என 90 இணைப்பு கல்லூரிகள் உள்ளன. இக்கல்லூரிகளில் வருகிற 19–ந் தேதி முதல் தொடங்க இருந்த எழுத்து மற்றும் செய்முறை தேர்வுகள் அனைத்தும் ஒத்தி வைக்கப்படுவதாக பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அனைத்து கல்லூரி முதல்வர்கள் மற்றும் புல முதன்மையர்களுக்கு புதுவை பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டாளர் லாசர் அனுப்பி உள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:–

புதுவை மத்திய பல்கலைக் கழகத்தின் கீழ் உள்ள இணைப்பு கல்லூரிகளில் வருகிற 19–ந் தேதி முதல் எழுத்து மற்றும் செய்முறை தேர்வுகள் தொடங்குவதாக இருந்தது.

தற்போதைய கொரோனா பெருந்தொற்று சூழல் காரணமாக இத்தேர்வுகள் மறு அறிவிப்பு வரும் வரை ஒத்தி வைக்கப்படுகின்றன. திருத்தி அமைக்கப்பட்ட தேர்வு தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

"DINAKARAN"

DATE : 17.04.2021

PAGE NO: 07

# புதுவை பல்கலைக்கழக தேர்வுகள் ஒத்தி வைப்பு

புதுச்சேரி, ஏப். 17: புதுவையில் கொரோனா தொற்று வேகமாக பரவி வருகிறது. இதனால் பள்ளி, கல்லூரிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது. 1 முதல் 11ம் வகுப்பு வரை ஆல்-பாஸ் அறிவிக்கப்பட்ட நிலையில், 12ம் வகுப்பு மாணவர்களுக்கு மட்டும் பொதுத் தேர்வு நடத்தப்பட உள்ளது. இதையொட்டி நேற்று செயற்முறை தேர்வு துவங்கியது. அதே நேரத்தில், கல்லூரி மாணவர்களுக்கு ஆன்லைன் மூலம் வகுப்பு நடைபெற்று வருகிறது. இந்நிலையில், புதுவை பல்கலைக்கழகத்தின் கீழ் மருத்துவம், பொறியியல், சட்டம், கலை, அறிவியல் என 90 இணைப்பு கல்லூரிகள் உள்ளன. இக்கல்லூரிகளில் வரும் 19ம் தேதி முதல் தொடங்கவிருந்த எழுத்து மற்றும் செய்முறை தேர்வுகள் அனைத்தும் ஒத்தி வைக்கப்படுவதாக பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அனைத்து கல்லூரி முதல்வர்கள் மற்றும் புலமுதன்மையர்களுக்கு புதுவை பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டாளர் லாசர் அனுப்பியுள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:

புதுச்சேரி மத்திய பல்கலைக்கழகத்தின் கீழ் உள்ள இணைப்பு கல்லூரிகளில் வரும் 19ம் தேதி முதல் எழுத்து மற்றும் செய்முறை தேர்வுகள் தொடங்குவதாக இருந்தது. தற்போதைய கொரோனா பெருந்தொற்று சூழல் காரணமாக, இத்தேர்வுகள் மறு அறிவிப்பு வரும் வரை ஒத்தி வைக்கப்படுகின்றன. திருத்தி அமைக்கப்பட்ட தேர்வு தேதி பின்னர் அறிவிக்கப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

"DINAMANI"

PAGE NO: 04

DATE: 17.04.2021

# புதுச்சேரி பல்கலை. கல்லூரிகளில் தேர்வுகள் ஒத்திவைப்பு

**புதுச்சேரி, ஏப். 16:** புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் கல்லூரிகளில் வருகிற 19-ஆம் தேதி முதல் நடைபெறவிருந்த ஆண்டுப் பருவத் தேர்வுகள் அனைத்தும் கரோனா பெருந்தொற்று பரவல் காரணமாக ஒத்தி வைக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இதுகுறித்து புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் தேர்வுக் கட்டுப்பாட்டு அதிகாரி டி.லாசர் வெள்ளிக்கிழமை வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுவை மாநிலத்தில் உள்ள புதுச்சேரி பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் அனைத்துக் கல்லூரிகளிலும் வருகிற 19-ஆம் தேதியிலிருந்து நடைபெறவிருந்த ஆண்டுப் பருவத் தேர்வுகள், செய்முறைத் தேர்வுகள் அனைத்தும் மறு உத்தரவு வரும் வரை ஒத்திவைக்கப்படுகின்றன. கரோனா பெருந்தொற்று பரவல் காரணமாக இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. தேர்வுகள் நடைபெறும் தேதி பின்னர் அறிவிக்கப்படும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"DAILY THANTHI"

PAGE NO: 02

DATE: 17.04.2021

# புதுச்சேரியில் கல்லூரி தேர்வுகள் ஒத்திவைப்பு

புதுச்சேரி, ஏப்.17-
புதுச்சேரியில் கல்லூரி தேர்வுகள் ஒத்திவைக்கப்படுவதாக பல்கலைக்கழகம் அறிவித்துள்ளது.

## தேர்வுகள் ஒத்திவைப்பு

கொரோனா தொற்று பரவல் காரணமாக புதுவையில் பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது. இதையடுத்து பள்ளி தேர்வுகள் ரத்து செய்யப்பட்டு அனைவரும் தேர்ச்சி என அரசு சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால் பிளஸ்-2 தேர்வுகள் மட்டும் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டு இருந்தது.

இந்தநிலையில் பிளஸ்-2 செய்முறை தேர்வுகள் நேற்று தொடங்கின. இத்தகைய சூழலில் புதுவையில் கல்லூரி தேர்வுகள், செய்முறை தேர்வுகள் ஒத்திவைக்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து பல்கலைக்கழக தேர்வு கட்டுப்பாட்டாளர் லாசர் விடுத்துள்ள சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது:-

## கொரோனா பரவல்

புதுவை பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட கல்லூரிகளில் வருகிற 19-ந்தேதி முதல் நடைபெற இருந்த தேர்வுகள் கொரோனா தொற்று பரவல் காரணமாக மறு உத்தரவு வரும் வரை தள்ளிவைக்கப்படுகிறது. தேர்வு தேதிகள் பின்னர் அறிவிக்கப்படும்.

இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

"DINAMALAR"

PAGE NO: 01 (PUDUCHERRY)

DATE: 17.04.2021

# பல்கலை., இணைப்பு கல்லூரிகள் செமஸ்டர் தேர்வுகள் தள்ளி வைப்பு

**புதுச்சேரி, ஏப். 17–** அதிகரித்து வரும் கொரோனா தொற்று பரவல் காரணமாக பல்கலைக்கழக இணைப்பு கல்லூரி மாணவர்களுக்கான செமஸ்டர் தேர்வுகள் தள்ளி வைக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி பல்கலைக்கழக கட்டுப்பாட்டில் 92 இணைப்பு கல்லூரிகள் உள்ளன. இக்கல்லூரிகளில் 45 ஆயிரம் மாணவ, மாணவிகள் படிக்கின்றனர். தற்போது பல்கலைக்கழக இணைப்பு கல்லூரி மாணவர்களுக்கு மார்ச், ஏப்ரல் மாத செமஸ்டர் தேர்வுகள் நடக்கின்றன.

இந்நிலையில் மாநிலத்தில் அதிகரித்து வரும் கொரோனா தொற்று பரவல் காரணமாக, புதுச்சேரி பல்கலைக் கழக இணைப்பு கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கான செமஸ்டர் தேர்வுகள் வரும் 19ம் தேதி முதல் மறு உத்தரவு வரும் வரை தள்ளி வைக்கப்படுகிறது. புதிய அட்டவணை பிறகு வெளியிடப்படும் என பல்கலைக்கழக தேர்வாணையம் இணைப்பு கல்லூரிகளுக்கு சுற்றிக்கை அனுப்பியுள்ளது.

புதுச்சேரி பல்கலைக் கழகத்தில் 7,500 மாணவர்கள் படிக்கின்றனர். இவர்களுக்கு செமஸ்டர் தேர்வு மார்ச் மாதம் முடிந்து விட்டது. அடுத்த செமஸ்டர் தேர்வுக்கான ஆன்–லைன் வகுப்புகள் துவங்கி நடந்து வருவது குறிப்பிடத்தக்கது.